# மியாட் மருத்துவமனையில் மூட்டு சீரமைப்பு அருங்காட்சியகம்

## சேர்மன் மோகன்தாஸ் திறந்தார்

சென்னை, ஏப். 18–

சென்னை மியாட் மருத்துவமனையில் மூட்டு சீரமைப்பு (மியூசியம் ஆப் ஆர்த்ரோபிளாஸ்ட்டி) அருங்காட்சியகம் நேற்று திறக்கப்பட்டது.

இதனை மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், முட நீக்கியல் துறைத் தலைவர் டாக்டர் பேரி டிசாரியோ ஆகியோர் திறந்து வைத்தனர்.

பின்னர் நிருபர்களிடம் அவர்கள் கூறியதாவது:–

""ஒருவர் ஆரோக்கியமாக நடப்பது, செயல்படுவதில் மூட்டுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. "ஆஸ்டியோ ஆர்த்தரைட்டிஸ்', "ருமாட்டாய்டு ஆர்த்தரைட்டிஸ்' உள்ளிட்ட மூட்டு நோய் பாதிப்புகள் காரணமாக மூட்டு இணைப்புகள் பாதிக்கப்பட்டு ஒருவர் நடக்க முடியாத நிலை ஏற்படுகிறது. குறிப்பாக முதுமையில் பெரும்பாலானோருக்கு இத்தகைய பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனினும் முடநீக்கியல் மருத்துவத் துறையில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக இடுப்பு மூட்டு இணைப்பு பாதிக்கப்பட்டாலோ அல்லது முழங்கால் மூட்டு இணைப்பு பாதிக்கப்பட்டாலோ செயற்கை மூட்டு மாற்று சிகிச்சை செய்து முழுமையான நிவாரணம் அளிக்க முடியும்.




மூட்டு மாற்று அறுவை சிகிச்சையின்போது நோய்த் தொற்று .05% ஆகும் குறைவாகவே உள்ளது.

மியாட் மருத்துவமனையில் 20,000 இடுப்பு மூட்டு மாற்று சிகிச்சைகள், 10,000 முழங்கால் மூட்டு மாற்று சிகிச்சைகள் என இதுவரை மொத்தம் 30,000 மூட்டு மாற்று சிகிச்சைகள் வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய சாதனையை முன்னிட்டு செயற்கை மூட்டுகள் மற்றும் அதன் வடிவங்கள் குறித்து நோயாளி தெரிந்து கொண்டு தேர்வு செய்யும் வகையில் மூட்டு சீரமைப்பு அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.

மியாட் இன்டர்நேஷனல் மருத்துவமனையின் தரை தளத்தில் திறக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகத்தை நோயாளிகள் உள்பட பொதுமக்கள் எவரும் இலவசமாகப் பார்வையிட்டுப் பலன் அடையலாம். கடந்த பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் மூட்டுகளின் வடிவங்கள், செயற்கை மூட்டு சிகிச்சையின் பலன் ஆகியவை கண்காட்சியில் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

மூட்டு மாற்று சிகிச்சை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த அருங்காட்சியகத்தின் நோக்கம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.